ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1882/17 - 2014 සැප්තැම්බර් මස 30 වැනි අඟහරුවාදා - 2014.09.30

*1882/17 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்புச் சட்டத்தின் 44 (2) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டணங்கள் (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் :-

(அ) அப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2014, மே 26 ஆந் திகதிய 1864/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை இரத்துச் செய்து ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின கீழ் விதிக்கப்பட்டு 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2013, மே 10 ஆந் திகதிய 1809/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கட்டளையை அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, செத்தெம்பர் 29.

**அட்டவணை**

அவ் அட்டவணையின் விடய இல. 06 பின்வரும் விடயத்தைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது :-

| | |
|---|---|
| ''06 ஏதேனும் கம்பனியொன்றின் ஏதேனும் ஒரு தொகைப் பங்குகள் விநியோகிக்கப்படுதலின், கைமாற்றப்படுதலின் அல்லது ஒப்படைக்கப்படுதலின் அடிப்படையில் வழங்கப்படும் பங்குச் சான்றிதழொன்று ; | |
| அத்தகைய பங்குகளின் திரட்டிய பெறுமதியின் ஒவ்வொரு 1,000 ரூபாவுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் அத்தகைய கைமாற்றல் அல்லது ஒப்படைத்தல் வழங்கப்படும் தினத்தில் திறந்த சந்தையில் அத்தகைய பங்குகளுக்கு உழைக்கக்கூடியது என வரி மதிப்பாளரால்/ உதவி ஆணையாளரால்/ பிரதி ஆணையாளரால்/ சிரேஷ்ட ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் பெறுமதி.''. | 5.00 ரூபா |

10- 642



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.